பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 08** **நாள் 20.01.2018**

## அம்மா இருச்சக்கர வாகன திட்டத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் பெண் ஊழியர்கள் 22–ந்தேதி முதல் விண்ணப்பிக்கலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்

பெண்கள் தங்களது பணியிடங்களுக்கு செல்வதற்கு உதவிபுரிய இந்த திட்டமானது தமிழக அரசால் கொண்டு வரப்பட்டுள்ளது. எளிதாக இயக்கக்கூடிய gearless/auto-gear இரு சக்கர வாகனங்கள் வாங்க இத்திட்டம் உதவிபுரியும். மாற்றுதிறனாளிகளுக்கு பொருத்தப்பட்ட சக்கரங்கள் உடைய இருசக்கர வாகனங்கள் வாங்கலாம்.

அதிகபட்சமாக 50 சதவீதம் வாகனத்தின் விலை அல்லது ரூ.25000 இவற்றில் எது குறைவோ அத்தொகை மான்யமாக வழங்கப்படும். பயன் பெறும் மகளிர் தங்களுக்கு விருப்பப்பட்ட வாகனங்களை வாங்கிக் கொள்ளலாம். சொந்த முதலீடு அல்லது வங்கி கடன் இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து பெற்று இரு சக்கர வாகனம் வாங்க வேண்டும். 125 CC க்கு மிகாமல் மோட்டார் வாகன சட்டத்தின் கீழ்(1988) பதிவு செய்ய கூடிய வாகனத்தை வாங்க வேண்டும். 01.01.2018க்கு பிறகு உற்பத்தி செய்யப்பட்ட புதிய, மாசு ஏற்படுத்தாத வாகனமாக இருக்க வேண்டும்.

மகளிர் பயனாளி, தமிழகத்தை பூர்வீகமாக கொண்டவராகவும், தமிழகத்தில் வசிப்பவராகவும், 18 முதல் 40 வயது வரை உள்ளவராகவும், ஓட்டுநர் உரிமம் பெற்றவராகவும் இருக்க வேண்டும். அவர்களின் தனி ஆண்டு வருமானம் ரூ.2,50,000/– மிகாமல் இருக்க வேண்டும்.

இதற்கான விண்ணப்பங்களை அருகில் உள்ள மண்டல அலுவலகங்களில் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை 22.01.2018 முதல் 05.02.2018 மாலை 5 மணி வரை சமர்ப்பிக்கலாம். விண்ணப்பங்களை நேரிலோ, பதிவு அல்லது விரைவு தபால் மூலம் சம்மந்தப்பட்ட மண்டல அலுவலகங்களில் அளிக்க வேண்டும். என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**